DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE )

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

Name: ராமமூர்த்தி

Father's Name: சக்கரவர்த்தி

Village: ஆவாரங்குப்பம்

Taluk:
Caste:
Calling:
Religion:
Age: 60

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 07.11.2023

O.S No.55/2018 பி.வா.சா.1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் நிலத்திற்காக வழக்கு போட்டுள்ளார். நிலம் தொடர்பாக என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. வழக்கு சொத்து ஆதியில் எனது தந்தை சக்கரவர்த்தி நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது உடன்பிறந்த சகோதரர் பெயர் சிவராஜ் நாயுடு என்றால் சரிதான். வாதி இந்த வழக்கினை 3 சர்வே எண் சொத்துக்கள் தொடர்பாக தாக்கல் செய்துள்ளார் என்றால் 2 சர்வே எண்கள் பொருத்து தான் எனக்கு தெரியும்.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது என்னால் எனது மைனர் மகன் 2ம் பிரதிவாதி தியாகுவிற்காக வேண்டி வாசு என்கிற விஜயசங்கர் பெயரில் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் சான்றிட்ட பதிவு நகலை வாதி வா.சா.ஆ.1 ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் செய்திருப்பார். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் ஆவண சொத்துக்கள் எனக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்டு என் பாகத்திற்கு வந்தததது என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் சொல்லப்பட்டுள்ளது.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது குடும்ப செலவிற்காகவும், மைனர் மகனின் படிப்பு செலவிற்காகவும், கிரையம் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எனது முதல் விசாரணையில் 3 வது பத்தியில் நான் வாசு என்கிற விஜயசங்கர் என்பவரிடம் கடனாக ரூ.18,500/- பெற்றுக்கொண்டு அதற்காக வேண்டி கிரைய பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் சொல்லப்பட்டுள்ளது.

அதன்படி ஏற்படுத்தியதாக சொல்லும் கடன் தொடர்பான கடன் பத்திரம் எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை.



4. தியாகு தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கடன் அடமான பத்திரம் ஏற்படுத்தப்பட்டதாக தான் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் சொத்து விவரத்தில் சர்வே எண்.263/15 மற்றும் 263/20 ஆகிய இரண்டு சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.263/20 ல் 33 -1/2 செண்ட் நிலம் கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசு என்கிற விஜயசங்கரிடம் மேற்படி சர்வே எண்.263/15 மற்றும் 263/20 சொத்துக்களை பொறுத்து நான் மறு கிரையம் பெற்றேனா என்றால் இல்லை நான் பணத்தை திரும்பி செலுத்தியவுடன் ஆவணத்தை ஒப்படைத்துவிட்டார்.

5. வழக்கு சொத்துக்கள் மூன்றையும் நானும் வாசு என்கிற விஜயசங்கர் சேர்ந்து டி.சி ராஜவேலு என்பவர் பெயருக்கு பி.வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தின் படி கிரையம் ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றால் சரிதான். நானும் வாசு என்கிற விஜயசங்கர் சேர்ந்து டி.சி ராஜவேலு என்பவர் பெயருக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கும் அடிப்படையில் டி.சி ராஜவேலு பெயருக்கு அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகாவது மேற்படி பட்டா வழங்கப்பட்டது குறித்து நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

6. டி.சி ராஜவேலுமிடமிருந்து நான் ஏற்கனவே கிரையம் கொடுத்த சொத்தினை மறு கிரையம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, நான் பணத்தை வாசு என்கிற விஜயசங்கரிடம் கொடுத்தேன் அவர் ஆவணத்தை வாங்கி கொடுத்தார். நான் வாசு என்கிற விஜயசங்கரிடம் பணம் கொடுத்ததாக சொல்வதற்கும், அசல் ஆவணங்களை என்னிடம் திரும்ப கொடுத்துவிட்டதாக சொல்வதற்கும் என்னிடம் எதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாதியின் தந்தை பெருமாள் நாயுடு எனக்கு உறவினரா என்றால் ஆமாம் உறவினர் தான்.

7. வழக்கு சொத்துக்களை டி.சி.ராஜவேலு பெருமாள் நாயுடு பெயருக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு பெருமாள் நாயுடு மேற்சொன்னவாறு கிரையம் பெற்ற விவரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் நோட்டீஸ் வந்த பிறகு தான் தெரியும். டி.சி.ராஜவேலு வழக்கு சொத்தினை பெருமாள் நாயுடு பெயருக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு இந்த வழக்கில் நோட்டீஸ் வந்த பிறகுதான் தெரியும்

என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது பெருமாள் பெயரில் கிரையம் ஏற்பட்ட விவரம் எனக்கு 2004ம் ஆண்டில் எனது சித்தப்பா மகன் சொல்லி தெரியும் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

8. என் முன்பு காட்டப்படும் வா.சா.ஆ.5 நிலஉடைமை குறிப்பேடு ஆவணத்தில் உள்ள புகைபடம் வாதியின் தகப்பனார் பெருமாள் நாயுடு உடையது என்றால் எனக்கு புகைபடத்தில் சரியாக தெரியவில்லை. வாதியின் தகப்பனார் பெருமாள் நாயுடு பெயரில் அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பெருமாள் நாயுடுவின் மனைவி மற்றும் பெருமாள் நாயுடு இருவரும் இறந்துவிட்டனர் என்றாலும், அவர்களுக்கு வாதி வெங்கடாசலம் மட்டுமே ஒரே ஒரு வாரிசு என்றால் சரிதான்.



9. எனக்கு வழக்கு சொத்து அல்லாது அதனையொட்டி வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் மேற்கு மற்றும் கிழக்கு திசைகளில் உள்ளது. எனக்கும் வெங்கடாசலத்திற்கும் இடையே 06.05.2018 அன்று வாய் தகராறு ஏற்பட்டது என்றால் அது உண்மையல்ல. 06.05.2018 தேதிக்கு பின்னிட்டு தான் வாதி நான் மற்றும் மகனுக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் 4 வது பத்தியில் எனது தந்தை 05.03.1997 அன்று என் பெயரில் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள உயில் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம்.

10. என் தந்தை எழுதிக்கொடுத்த 05.03.1997 தேதியிட்ட உயில் ஆவணத்தில் நான் ஏற்கனவே கிரையம் கொடுத்துள்ள கிரைய சொத்துக்கள் சேர்த்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனதுசாட்சியத்தில் எனக்கு உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்தை எனது மகன் பெயருக்கு வா.சா.ஆ.9 விடுதலை பத்திரம் ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் மகன் பெயரில் நான் ஏற்படுத்திய வா.சா.ஆ.9 விடுதலை பத்திரத்தில் நான் முன்பே ராஜவேலு மற்றும் வாசு என்கிற விஜயசங்கர் பெயரில் ஏற்படுத்திய ஆவணங்கள் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.9 விடுதலை ஆவணமானது 04.01.2012 அன்று தயாரிக்கப்பட்டு 06.01.2012 அன்று பதிவு செய்யப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். 1993, 1994 வருடங்களில் நான் வாசு என்கிற விஜயசங்கர் பெயரில் டி.சி.ராஜவேலு பெயரிலும், கிரைய ஆவணங்கள் ஏற்படுத்திய கொடுத்து அவர்கள் இருவரும் பெருமாள் நாயுடு பெயருக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்த பிறகு அந்த சொத்தினை பொறுத்து மோசடியாக உயில் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு என் மகன் பெயரில் மோசடியாக விடுதலை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்து விட்டேன் என்றாலும், அந்த விடுதலை ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்ப கோரி இந்த வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

12. ஏற்கனவே கிரையம் செய்யப்பட்ட கிரைய சொத்துக்களை பொறுத்து தவறான உயில் மற்றும் விடுதலை ஆவணங்களின் படி என் மகன் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட சொத்தினை பொறுத்து தவறான முறையில் விடுதலை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், அதன்படி அந்த விடுதலை ஆவணத்தை நானும், என் மகனும் ரத்து செய்து கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. அதேபோல 05.10.1987 அன்று எனது தந்தையும், எனது சகோதரரும் சேர்ந்து குடும்ப சொத்தில் ஒரு பகுதியை ஏ.எஸ். வெங்கடாசலம் பெயருக்கு கிரைய,ம் ஏற்படுத்தக்கொடுத்துள்ளனர் என்றாலும், இந்த விவரம் வா.சா.ஆ.8 வில்லங்க சான்றிதழில் 3 வது பதவாகியுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.



13. எனது தந்தையும், எனது சகேதாரரும் அவரது பாக சொத்தை விற்பனை செய்த பிறகுதான் நான் எனது பாக சொத்தினை டி.சி.ராஜவேலு மற்றும் வாசு என்கிற விஜயசங்கர் கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் பெருமாள் நாயுடு மகன் வெங்கடாசலம் பெயரில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அசல் வழக்கு எண்.58/2017 வழக்கானது வேறு வெங்கடாசலம் மீது போடப்பட்ட வழக்காகும். அப்படியானால் வாதி மீது அசல் வழக்கு எண்.58/2017 வழக்கானது வாதி மீது தாக்கல் செய்து நடத்தி வருவதாக சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றால் ஆமாம் தவறு தான்.

14. எனது 29.08.2021 தேதியிட்ட சாட்சியத்தில் 1996 ம் ஆண்டில் ரூ.1,00,600/- தொகையை செலுத்தி பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளதை நிரூபிக்க ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கும் வாதிக்கும் எவ்வளவு காலமாகபேச்சு வார்த்தை இல்லை என்றால் எனக்கும், அவரது தந்தைக்கும் தான் அவ்வவ்போது பேச்சு வார்த்தை இருந்தது, எனக்கும், வாதிக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. வழக்கு சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு திசைகளில் எனக்கு நிலங்கள் உள்ளதால் வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தவறான ஆவணங்களை நான் ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல.

15. வழக்கு சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு திசைகளில் உள்ள சொத்து என் பெயரில் உள்ளதா என்றால் இல்லை, 2 ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. மற்ற சொத்துக்கள் 2 ம் பிரதிவாதியின் பெயரில் இருப்பதால்தான் அவர் பெயரிலேயே விடுதலை ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொடுத்துள்ளது அதனால் நானும் எனது மகனும் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.9 ஆவணமான தவறான விடுதலை பத்திரத்தை வழக்கில் கோரியுள்ளவாறு ரத்து செய்து கொடுக்க

கடமைப்படுத்துள்ளோம்      என்றால் சரியல்ல. நானும் எனது மகனும் வழக்கு சொத்தில் உரிமை கோர எந்தவிதமான சட்டப்படியான உரிமையையும்  இல்லை என்றால் சரியல்ல.  அதனால் வாதிக்கு அவர் வழக்குரையில் வேண்டியுள்ளது போல பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.